**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 118/மா/2021**
**நாள் : 22.3.2022**

திரு. M. கணேசன்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

1) தலைமை மின் கண்காணிப்பாளர்,
வல்லநாடு தலைமை நீருற்று நிலையம்,
தூத்துக்குடி மாநகராட்சி.

2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி.

3) செயற்பொறியாளர்,
தூத்துக்குடி மாநகராட்சி.

4) உதவி இளநிலை பொறியாளர்,
தூத்துக்குடி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

தூத்துக்குடி, வல்லநாடு, வண்டிமலைச்சியம்மன் கோவில் தெரு, 1/63-2, என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. M. கணேசன், அவர்களின் 27.11.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.12.2021-ல் பெறப்பட்டு 118/மா/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, வல்லநாடு, வண்டிமலைச்சியம்மன் கோவில் தெரு, 1/63-2, என்ற எண்ணிடப்பட்ட முகவரியில் வசிக்கும் திரு. M. கணேசன், அவர்களின் 27.11.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். தூத்துக்குடி மாநகராட்சி 14.09.2017ஆம் ஆண்டு மேற்படி திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட அறிக்கை தூத்துக்குடி மாநகராட்சி குடிநீர் திட்டம் 2017-18 (JICA) கீழ் மாநகராட்சி வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தில் முன்புறத்தில் தடுப்பு சுவர் மற்றும் நுழைவு வாயில் அமைக்கும் பணி மற்றும் தார்சாலை அமைத்து சாலையின் இருபுறமும் அழகு செடிகள் நடும் பணிக்கு

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்படுகின்றன என தினசரி நாளிதழில் போடப்பட்டுள்ளது. மேற்படி 1வது எதிர்மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சியின் கீழ் இயங்கும் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் மின் கண்காணிப்பாளராக பணி பொறுப்பிலிருந்து வருகிறார். மேற்படி 1வது எதிர்மனுதார்க்கு கீழ் இயங்கும் அலுவலகத்தில் தூத்துக்குடி மாநகராட்சி குடிநீர் திட்டம் 2017-2018 (JICA) கீழ் வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தில் முன்புறம் தடுப்பு சுவர் மற்றும் நுழைவு வாயில் தார் சாலையின் இருபுறமும் அழகு செடிகள் நடும் பணியில் ரூபாய் 40,67,954.50 பைசா (நாற்பது இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்கு ரூபாய் ஐம்பது பைசா) தொகையில் ஏலம் எடுக்கப்பட்டது. வேலை நடைபெற்றது அந்த சுற்று சுழலில் வெளி நபர்கள் யாரும் எந்தவிதமான நபர்களும் உள்ளே வரக்கூடாது என்பதற்காக சுவற்றின் மேற்பகுதியில் கம்பி நடப்பட்டும் முள் வேலி அமைக்காமல் மேற்படி அலுவலகத்தில் முள் வேலி கட்டப்படாமல் இருந்துள்ளது. இது சம்பந்தமாக நான் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் இயக்குநர், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வடிகால் துறை அலுவலகத்திற்கும் புகார் மனு சமர்ப்பித்திருந்தேன். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் அனைத்து விதமான தகவல்களை பெறுவதற்கு மனு சமர்ப்பித்திருந்தேன். எனது மனுவினை பெற்றுக்கொண்ட தூத்துக்குடி மாநகராட்சி பொது தகவல் அலுவலர் அதற்கு உண்டான கட்டணம் செலுத்தி தகவல் பெற்றுக்கொள்ள என்னை அறிவுறுத்தினார். நானும் கட்டணம் செலுத்தி அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொண்டேன் இதனை பற்றி அறிந்து கொண்ட எதிர்மனுதாரர்கள் ஒப்பந்தம் பெறப்பட்டதுமுதல், நாளது தேதி வரை ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட வேலையை முடிக்காமல் தற்போது தார் சாலை அமைப்பதற்கும் சாலையின் இரு புறங்களிலும் செடி அமைப்பதற்கும் சென்டர் மீடியம் அமைப்பதற்கும் முழு வீச்சில் பணி நடைபெற்று வருகிறது. மேலும் நாளது தேதி வரை நுழைவு வாயில் அமைக்கப்படாமல் மேற்படி 1வது எதிர்மனுதாரரின் முழு ஒத்துழைப்பு செய்து ஒப்பந்தகாரரிடம் சட்ட விரோதமாக இலஞ்ச தொகை பெற்றுக்கொண்டு 1வது எதிர்மனுதாரரின் முழு கட்டுபாட்டில் இயங்கி வந்த அலுவலகத்தில் நடைபெற்ற ஊழல் சம்பந்தமாக எந்தவிதமான தகவலும் மேற்படி இயக்குநர் நகராட்சி நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்படாமல் தற்போது எதிர்மனுதாரர்கள் சேர்ந்து 2017ல் முடித்து வைக்கப்பட்ட ஒப்பந்தத்தை விதி மீறி நான் புகார் கொடுத்த ஒரே காரணத்திற்காக இரு புறத்திலும் தார் சாலை அமைப்பதற்கு மேற்படி எதிர்மனுதாரர்கள் ஒப்பந்தகாரர்களை நிர்பந்தப்படுத்தி பணியினை மேற்கொண்டு வருகிறார். மேற்படி 1வது எதிர்மனுதாரர் இன்னும் ஒரு வருடத்தில் ஓய்வு பெற உள்ளார் என்பதால் மேற்படி 2வது எதிர்மனுதாரர் சட்டவிரோதமாக கைமாறு பெற்றுக்கொண்டு முழு ஒத்துழைப்பு செய்து வருகிறார். மேற்படி 3வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் ஒப்பந்தபுள்ளியில் ஒப்பந்தம் போடும் போது ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க தொழில் நுட்ப வழுங்கல் போன்றவற்றை பரிசோதிக்க நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ஆவார்கள்.

மேலும் ஒப்பந்தப்புள்ளி தொடங்கும்போது வேலை நடக்கும் போது எடுக்கப்பட்ட போட்டோ அனைத்தையும் மேற்படி 3வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் பெற்ற பின்னர் தான் ஒப்பந்தகாரர்க்கு ஒப்பந்த தொகையை ஒப்படைத்திருக்க வேண்டும். மேற்படி எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கு எதிராகவும் தற்காலிகமாகவும் அரசாங்கத்தின் பணத்தினையும் கையாடல் செய்துள்ளார் என்பது நிரூபணமாகிறது. 2017-ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட ஒப்பந்தத்தை 2021ல் வேலையை திரும்ப தொடங்குவது ஊர்ஜிதமாகிறது என்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் 12.08.2021 தேதியிட்டு பதிவு தபால் மூலம் புகார் மனு அனுப்பியிருந்தேன். எனது புகார் மனுவினை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் நாளது தேதி வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் கிராமபுறங்களில் சொல்வது போல் கொக்கினை பிடிக்க செல்லும் போது கொக்கின் தலையில் வெண்ணை வைத்தால் கொக்கின் கண்ணை மறைத்துவிடும் அதன் பின் கொக்கினை பிடித்துக் கொள்ளலாம் என்பார்கள்.

காரணம் கொக்கின் தலையில் வெண்ணை வைக்கும் போது பிடித்து கொள்ளலாம் என்ற கதையை போல் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளருக்கு நடவடிக்கைக்காக எனது புகார் மனு அனுப்பப்பட்டுள்ளது என்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சிதலைவர் தெரிவித்திருப்பது எனக்கு மிகுந்த வருதத்தை அளிக்கிறது. இது சம்பந்தமாக எனது புகார் மனுவானது ஒ.மு.(ஜே5)22600/2021ன் படி நாளது தேதி வரை மாவட்ட ஆட்சித்தலைவரால் பரிந்துரைக்கப்பட்டும் புகார் கொடுத்த தேதியிலிருந்து நாளது தேதி வரை விசாரணை அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை என்பதால் எனது புகார் மனு மீது விசாரணை மேற்கொள்ளுமாறு மெத்தப்பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேற்படி எதிர்மனுதார்களை நேரடியாக விசாரணைக்கு அழைக்கும் பட்சத்தில் என்னையும் நேரடியாக விசாரணைக்கு அழைப்பாணை கிடைக்கும் பட்சத்தில் விசாரணைக்கு ஆஜராக தாயாராக் உள்ளேன்'' என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பான அறிக்கையை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு 3.12.2021 நாளிட்ட அறிவிப்பு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 10.01.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

“திரு. எம். கணேசன் என்பவரது புகார் மனுவில், தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதியில் முன்புறம் தடுப்புசுவர், நுழைவு வாயில், தார்ச்சாலை மற்றும் அதன் இருமருங்கிலும் அழகுச் செடிகள் அமைக்கும் பணியில் முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும், மேலும் முதலாம் எதிர்மனுதாரர் திரு. க. பாபு, மின்கண்காணிப்பாளர் என்பவர் ஒப்பந்ததாரரிடம் இலஞ்ச தொகை பெற்றதாகவும், மேலும் 23, மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் ஒத்துழைப்பு செய்து வருவதாகவும் புகார் மனு சமர்ப்பித்துள்ளார். அதன் பொருட்டு கீழ்க்காணும் விவரங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தூத்துக்குடி மாநகராட்சியில் மின்கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு.க.பாபு என்பவர் (முதலாம் எதிர் மனுதாரர்) இம்மாநகராட்சியில் 15 வருடங்களாக மேலாக, எவ்வித குற்றச்சாட்டிற்கும் இடமின்றி, தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம், அகரம் நீரேற்று நிலையம், கலியாவூர் நீரேற்று நிலையம் மற்றும் கீழ் வல்லநாடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள மின்மோட்டார் பம்புகள் உயர்மின் பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவற்றை இயக்கி பராமரித்து, தூத்துக்குடி மாநகருக்கு குடிநீர் விநியோகம் செய்திடும் பணியினை மேற்கொண்டு வருகிறார். மேற்படி பணியாளருக்கும், மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்த பணிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மேற்படி பணியானது இம்மாநகராட்சி மைய அலுவலகத்தில் பணிபுரியும் உதவிப்பொறியாளர் மேற்பார்வையில் ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியாகும்.

மனுதாரர் எம். கணேசன் என்பவர் தன் சொந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, திரு. பாபு, மின்கண்காணிப்பாளர் என்பவர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் கண்காணிப்புத்துறை மூலமாகவும் பல புகார் மனுக்களை சமர்ப்பித்து ஒரு தனிநபரை பற்றி அலுவலகத்திற்கு தொடர்பில்லாத தகவல்களை வழங்க கோரி அன்றாட அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தி வருகிறார்.

தூத்துக்குடி மாநகராட்சி வளர்ந்து வரும் மாநகராட்சியாக, செயல்பட்டு வரும் நிலையில் குறைந்த அளவிலான பணியாளர்களை கொண்டு, பொது மக்களின் நலனுக்காக, பல்வேறு அடிப்படை பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு பணியாளர்களின் அன்றாட வேலைப்பளு அதிகமாக உள்ள சூழ்நிலையில், மனுதாரர் தன் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, எவ்வித பொது நலனும் அல்லாத பட்சத்தில், ஒரு குறிப்பிட்ட பணியாளரை பற்றி புகார் மனுக்களை சமர்ப்பித்து பொது அதிகார அமைப்பின் அன்றாட அலுவலக பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறார்.

ஊழலைக் கட்டுப்படுத்தவும் மற்றும் ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் பொருட்டும் இயற்றப்பட்ட சட்டங்களை, மனுதாரர் தன் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, தவறான வழியில் பயன்படுத்தி வருகிறார்.

மேலும் மேற்படி ஒப்பந்தப்பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் காலமாகிவிட்டதால், பணிகள் முழுமையான அளவில் நிறைவு பெறாமல் உள்ளது. மேலும் முடிக்கப்பட்ட பணிகளுக்கான முதல் மற்றும் பகுதி செலவீனப்பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் அனைத்தையும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலமாக பெற்றுக்கொண்ட மனுதாரர், மேற்படி பணியில் திரு. பாபு, மின்கண்காணிப்பாளர் முறைகேடு செய்துள்ளார் எனத் தெரிவிப்பதன் மூலம் ஒரு தனிநபரை, தன் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பழிவாங்கும் எண்ணத்துடன் செயல்பட்டு புகார் மனு செய்து வருகிறார் என்பது தெளிவாகிறது.

மேலும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் வாயிலாக மேற்படி எதிர்மனுதாரர்கள் குறித்து பண்பாடற்ற தரக்குறைவான வார்த்தைகளுடன் மனு செய்தும், அலுவலகத்திற்கு பொருந்தாத தகவல்கள், பண்பாடற்ற அநாகரீகமான தகவல்கள் மற்றும் பொது நலனற்ற தகவல்களையும் வழங்க கோரிய நிலையில், மேற்படி மனுதாரர் குறித்து தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைகேடு நடைபெற்றுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ள ஒப்பந்த பணிக்கும், மேற்படி 1வது எதிர் மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லாத நிலையில், மேலும் மேற்படி ஒப்பந்தப் பணியினை மேற்கொண்டு வரும் மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் காலமாகிவிட்டதால், பணிகள் முழுமையான அளவில் முடிக்கப்படாமல் உள்ளது. எனவே எவ்வித பொது நலனும் அல்லாத தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வழங்கப்பட்ட புகார் மனுவினை தள்ளுபடி செய்திடும்- படியும், மேலும் மனுதாரரை விசாரணைக்கு நேரில் ஆஜராக செய்து இனிவரும் காலங்களில் இது போன்று இம்மாநகராட்சி பணியாளர்களின் அன்றாட அலுவலகப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மற்றும் இம்மாநகராட்சி உயர் அலுவலர்களின் அலுவலகப் பணிக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் புகார் செய்யாதிருக்க ஆவண செய்யும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையர் (அவரது பிரதிநிதி) தூத்துக்குடி மாநகராட்சி ஆகியோரை 1.3.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.2.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

மனுதாரர் 1.3.2022 அன்று திருநெல்வேலி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"JICAவின் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தின் முன்புறத்தில் தடுப்புச் சுவர், நுழைவு வாயில் அமைத்தல், அங்கு தார் சாலை அமைத்து சாலையின் இருபுறமும் அழகுச் செடிகள் அமைத்தல் பணிக்கு ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற ஒப்பந்தப் புள்ளி

கோரப்பட்டது. ஒப்பந்தப்படி ஒப்பந்ததாரர்கள் பணிகளை முடிக்காமல் இருந்தனர். நான் இது குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசுக்கு புகார் மனுக்கள் அளித்ததும்,20 நாட்களுக்கு முன்புதான் மேற்கண்ட இடத்தில் தார் சாலை அமைத்தல், சாலையின் இரண்டு பக்கங்களிலும் செடிகளை அமைத்தல் மற்றும் சென்டர் மீடியம் அமைத்தல் ஆகிய பணிகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் நாளது தேதிவரை மேற்கண்ட தார்சாலைப் பணிகள் முடியவில்லை. மேலும் நுழைவு வாயிலும் அமைக்கப்படவில்லை. மேற்கண்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் கூறியுள்ள காலத்திற்குள் பணிகளை முடிக்கத் தவறியுள்ளார். இதற்கு மாநகராட்சி அலுவலர்களும் உடந்தையாக இருந்து செயல்பட்டுள்ளனர். எனவே, இது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறும் தவறுக்கு உடந்தையாக இருந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் செயற்பொறியாளராக பணியாற்றும் பி. ரூபன் சுரேஷ் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“தூத்துக்குடி மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனுதாரர் தாமதமாக நடைபெற்றதாகக் கூறப்படும், திட்டப்பணிகளில் எவ்வித சுணக்கமும் ஏற்படவில்லை. மனுதாரர் தனது புகார் மனுவில் கூறியுள்ள புகார்கள் அனைத்தும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஒரு குறிப்பிட்ட மாநகராட்சிப் பணியாளரைப் பற்றியதாகும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள திட்டப் பணிகளை செயற்பொறியாளராகிய நானும், மற்றும் மாநகராட்சி பொறியாளர்களும் ஆய்வு செய்ததில் மனுதாரர் கூறியுள்ள புகாரில் எவ்வித உண்மையும் இல்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் 10.1.2022 நாளிட்ட அறிக்கை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வின் முறையீட்டு மனுதாரரான திரு. M. கணேசன் என்பவரின் தாயார் பெயர் திருமதி. M. முத்துலெட்சுமி ஆகும். திருமதி. M. முத்துலெட்சுமியின் கணவர் திரு. A. முருகன், வால்வு ஆப்ரேட்டராக வல்லநாடு தலைமை நீர் பணியிட மின் கண்காணிப்பாளரான திரு. K. பாபு (மனுதாரரால் குற்றம் சாட்டப்படுபவர்) கீழ் பணிபுரிந்து வருகிறார். திரு. A. முருகன், திருமதி. M. முத்துலெட்சுமியை விட்டு பிரிந்து மறுமணம் செய்துள்ளார். ஜீவனாம்சம் தொடர்பாக அவருக்கும் அவரது மனைவிக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக அறியமுடிகிறது. மேற்படி திரு. A. முருகன் மாநகராட்சியால் பெற்றும் வரும் சம்பளம், பணி பதிவேட்டில் யாரை வாரிசுதாரராக நியமிக்கப்பட்டுள்ளனர் போன்ற விபரங்களை கேட்டு அவரது முதல் மனைவி திருமதி. M. முத்துலெட்சுமி மற்றும் மகன் திரு. M. கணேசன் இருவரும் மாநகராட்சிக்கு கடிதம் எழுதியுள்ளனர். தனி நபர் பற்றிய விவரங்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம் என திரு. A. முருகன் எழுத்துபூர்வமாக கேட்டு கொண்டதின் பேரில் மேற்படி விபரங்கள் ஏதும் மாநகராட்சி அலுவலகத்தில் தரப்படவில்லை என தெரிகிறது.

மேற்கண்ட நபர் திரு. A. முருகன், திரு. K. பாபு அவர்கள் கீழ் பணிபுரிந்து வருவதால் அவரைப் பற்றிய விவரங்களை கொடுக்காமல் தடுப்பதாகவும், பிரச்சனை ஏதும் இன்றி திரு. A. முருகனை பாதுகாப்பதாக தவறாக எண்ணிக்கொண்டு; அவரது முதல் மனைவியான திருமதி. M. முத்துலெட்சுமி மற்றும் அவரது மகனான திரு. M. கணேசன் ஆகிய இருவரும் வேண்டுமென்றே பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியும் துளியும் சம்பந்தமில்லாத

விபரங்களை கேட்டும் தகவல் அறியும் சட்டம் கடிதம் மூலமாக தொடர்ந்து கடிதங்கள் அனுப்பி வருவதாகவும் இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாக திரு. K. பாபு, மின் கண்காணிப்பாளர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்கள் முறப்பநாடு காவல் துறை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்திலிருந்து அறியமுடிகிறது.

மேலும் தலைமை நீர்பணியிட பணியாளர்கள் காவல்துறை ஆய்வாளருக்கு அனுப்பிய மனுவிலும் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“மேற்படி நபர்களின் குடும்ப சண்டையினை அவர்களுக்குள் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டியும், எங்களின் குடிநீர் பணிக்கு எந்தவித இடையூரும் ஏற்படாத வகையில் மேற்படி நபரான M. கணேசன் மீது காவல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளனர்.

ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்கள் மாநில தகவல் ஆணையர் அவர்களுக்கு அனுப்பிய 2.9.2021 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“தூத்துக்குடி மாநகராட்சியில் மின்கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு. க. பாபு என்பவர் இம்மாநகராட்சியில் 15 வருடங்களுக்கும் மேலாக, எவ்வித குற்றச்சாட்டிற்கும் இடமின்றி, மாநகராட்சிக்கு சொந்தமான வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் பணிகள் மேற்பார்வை செய்து வருகிறார். மனுதாரர் திரு. M. கணேசன் மற்றும் அவரைச் சார்ந்த, திருமதி. M. முத்துலெட்சுமி மற்றும் திரு. மகாராஜா ஆகியோர், தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக, தகவல் அறியும் உரிமைச்சட்ட வாயிலாக,,திரு. பாபு என்பவரை பற்றி, தகவல் அறியும் உரிமைச்சட்ட விதிமுறைகளுக்கு உட்படாத தகவல்களையும், அலுவலகத்திற்கு பொருந்தாத தகவல்களையும் வழங்கக் கோரி, தொடர்ந்து தகவல் அறியும் உரிமைச்சட்ட விண்ணப்பம் சமர்ப்பித்து வருவது, மாநகராட்சி பணியாளர்களின் அன்றாட அலுவலக பணிகளை பாதிக்கும் வகையில் அமைகிறது.

மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிமுறைகள் மற்றும் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டு, தகவல் வழங்கப்பட்ட நிலையில், அரைகுறையான தகவல் வழங்கப்பட்டுள்ளதாக, தகவல் அறியும் உரிமைச்சட்ட மேல் முறையீட்டு மனு சமர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், பொது தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் ஆணையர் ஆகியோர், மேற்படி பணியாளர் திரு. பாபு என்பவர் தொடர்பான தகவல்களை, பணம் பெற்று கொண்டு தர மறுப்பதாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகளுக்கு முரணாக செயல்படுவதாகவும், அவர்களை பணி நீக்கம் செய்திட வேண்டும் எனவும் மேல்முறையீட்டு விண்ணப்பம் சமர்ப்பித்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை ஆயுதமாக பயன்படுத்தி, தொடர்ந்து மாநகராட்சி பணியாளர்களின் அன்றாட அலுவலக பணிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தி வருகிறார். உதாரணமாக 18.05.2021ம் தேதி முதல் 10.08.2021ம் தேதி வரை மட்டும் 51 தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்களும், 18.06.2021ம் தேதி முதல் 23.07.2021ம் தேதி வரை 36 மேல்முறையீட்டு மனுக்களும் அனுப்பியுள்ளார்.

மேலும் மனுதாரர் திரு. M. கணேசன் பெரும்பான்மையான தகவல்கள் தரக்குறைவான வார்த்தைகளுடனும், மனதில் தோன்றியனவற்றை எல்லாம் பண்பாடற்ற முறையில் எழுதி மனு செய்தும், மாநகராட்சி அலுவலர்களுக்கு தொல்லை தரும் நோக்கிலும் அமைந்துள்ளது. எனவே மேற்படி மனுதாரர் திரு. M. கணேசன், திருமதி. M. முத்துலெட்சுமி மற்றும் திரு. மகாராஜா என்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தமிழ்நாடு தகவல் ஆணையம் மேற்படி மனுதாரர்களை, நேரில் விசாரணைக்கு ஆஜராக செய்து, இனிவரும் காலங்களில் இதுபோன்று தகவல் அறியும் உரிமைச்சட்ட விதிமுறைகளுக்கு முரண்பட்ட தகவல்கள், பண்பாடற்ற அநாகரீகமான தகவல்கள், அலுவலகத்திற்கு பொருந்தாத

தகவல்களை கோரி மனு செய்யாதிருக்க ஆவன செய்யும்படி கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இந்நேர்வில் மனுதாரர் திரு. M. கணேசன் அவர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசுக்கும் புகார் மனுக்கள் அளித்ததும் 20 நாட்களுக்கு முன்புதான் மேற்கண்ட இடத்தில் தார் சாலை அமைத்தல் சாலையின் இரண்டு பக்கங்களிலும் செடிகள் அமைத்தல் மற்றும் செண்டர் மீடியம் அமைத்தல் ஆகிய பணிகள் அவசரமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் நாளது தேதிவரை மேற்கண்ட தார் சாலைப் பணிகள் முடியவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதை சாதாரணமாக புறந்தள்ள இயலாது. 31.12.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு உள்ளது. வேலை உத்தரவில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அதாவது 90 நாட்களுக்குள் பணி முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதாவது 31.03.2019க்குள் முடிக்க வேண்டிய பணியானது மனுதாரரால் தெரிவிக்கப்பட்டப்படி தற்போது வரை பணிமுடிக்கப்படாமல் உள்ளதை இதன் மூலம் அறியமுடிகிறது.

இது அலுவலர்களின் அலட்சிய போக்கையே காட்டுவதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இதில் விதிமீறலோ முறைகேடோ நடந்திருப்பின் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது, மேலும் ஒப்பந்தப்பதிரத்தில் உள்ள நிபந்தனையின்படி (Articles of Agreement) ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பட்ட காலக்கெடுவுக்குள் ஒப்பந்த பணியினை முடிக்காதபட்சத்தில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கையில் எழுப்பப்படும் தணிக்கை தடை பத்திகளுக்கும், அதனால் ஏற்படும் நிதி இழப்பிற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார் என ஒப்பந்ததாரரால் ஒப்பந்தபத்திரம் கையொப்பமிட்டுள்ளார். வேலை உத்தரவு வழங்கி காலதாமதமாக இன்னும் பணி முடிக்கப்படாத நிலை உள்ளதால் இதனால் ஏற்பட்ட அனைத்து நிதி இழப்புகளையும் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்ய ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சிக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் இதுபோன்ற முறைகேடுகள் இனிவரும் காலங்களில் நிகழாதிருக்க உரிய கண்காணிப்பினை மேற்கொள்ள ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களை அறிவுறுத்துகிறது. மேலும் மேற்கண்ட பணிகளை 3 மாத காலத்திற்குள் முடித்து, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

The Corporation has failed to initiate necessary action against the contractor for default and colossal delay in completing the work in 2019 itself as per the work order conditions stipulated. The reasons for such omission are not clear from the report of the Commissioner and deposition of the official in the hearing.

The Commissioner, Thoothukudi Corporation is directed to launch disciplinary action against the official delinquents who are involved in this inordinate delay and violation of work order conditions. They have turned a blind eye to this black spot with doubtful intentions. The work order should have been cancelled and fresh tender call should have been floated. The mystery behind this inaction does not speak well of the Corporation authorities. It is shocking to observe that the work is yet to be completed.

The DMA is instructed to pursue action in this issue to its logical end with a firm hand. It is regrettable that such delays and omissions are exposed through such a petition filed before this forum.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. கணேசன்,
   த/பெ. முருகன்,
   1/63-2, வண்டிமலைச்சியம்மன் கோவில் தெரு,
   வல்லநாடு, தூத்துக்குடி – 628 252.
2. ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி.
   தூத்துக்குடி.
3. தலைமை மின் கண்காணிப்பாளர்,
   வல்லநாடு தலைமை நீருற்று நிலையம்,
   தூத்துக்குடி மாநகராட்சி.
4. செயற்பொறியாளர்,
   தூத்துக்குடி மாநகராட்சி.
5. உதவி இளநிலை பொறியாளர்,
   தூத்துக்குடி மாநகராட்சி.
6. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
7. இணை இயக்குநர்,
   ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/3/22

செயலாளர்